**ARTICLE 09 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00025**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 44–49
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# கி.ராஜநாராயணனின் 'கதவு ' சிறுகதையில் வாழ்வியல் பண்பாடு.

## Ki. Rajanarayananin Kathavu Sirukathaiyil Vazhviyal Panbadu

**முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க**[1,*]

[1]தமிழ் உதவிப் பேராசிரியர், சௌராஷ்டிரா கல்லூரி. மதுரை., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க — muthamilselvi1974@gmail.com

### Abstract

In a world filled with numerous challenges, self-confidence serves as a vital force that helps women overcome disappointments and poverty. This paper explores the theme that women should move through society with self-confidence and courage without being broken by the external struggles associated with family, profession, children, and society.The world of children is selfless and joyful. Children are the leaders of tomorrow. Their imagination and creative abilities take them into a world of dreams. However, when poverty enters the lives of these children, their minds become distressed and their imaginative world begins to disintegrate. This paper examines these themes through the social and cultural life depicted in Ki. Rajanarayanan’s short story “Kathavu.”

### ஆய்வுச் சுருக்கம்

பெண்கள், சிக்கல்கள் நிறைந்த இவ்உலகில் ஏமாற்றங்களையும், வறுமையையும் சந்திக்கும் பொழுது அவர்களை தூக்கி நிறுத்துவது தன்னம்பிக்கை என்னும் கருவியாகும். குடும்பம், தொழில், குழந்தைகள், சமூகம் என்னும் புறப்போராட்டங்களால் உடைந்து விடாமல் தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் சமூகத்தில் நடமாட வேண்டும் என்னும் கருப்பொருளையும், குழந்தைகளின் உலகம் தன்னலமற்றது. மகிழ்ச்சியானது. இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். கற்பனைத் திறனும், படைப்பாற்றல் திறனும் அவர்களை கனவுலகத்திற்கு அழைத்துச் செல்லும். இக்குழந்தைகளின் வாழ்வில் வறுமை நுழைந்து விட்டால் மனம் வாடி சிதைந்து விடுவர் என்னும் கருப்பொருளையும் களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** கரிசல் மண்; தன்னம்பிக்கை; பண்பாடு; ஆளுமைத்திறன்; வாழ்வியல்; சூழ்நிலை; மனித நேயம்; படைப்பாற்றல்; நேர்மறை.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, மு. . மு. செ. (2026). கி.ராஜநாராயணனின் 'கதவு ' சிறுகதையில் வாழ்வியல் பண்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

21 ஆம் நூற்றாண்டில் உலகமானது 'விஞ்ஞானமயமாக்கல்' என்னும் நிலையை அடைந்து அதனைக் கொண்டாடிக் கொண்டிருந்தாலும் எல்லா நாடுகளிலும் எங்கோ ஒரு மூலையில் வறுமையின் குரலும் ஒலித்துக் கொண்டுதான் உள்ளது. கணினி யுகமான இக்காலகட்டத்தில் உலக மக்களின் வாழ்க்கைத் தரமும், கல்வி மேம்பாடும் வளர்ந்து விட்ட அதே சூழலில் நமது பண்பாட்டு மரபுகளும் வாழ்க்கைச் சூழலும் வறுமை காரணத்தால் சற்று தடுமாற்றம் அடையவே செய்திருக்கின்றன. குழந்தைகளின் உலகம் தன்னலமற்றது, மகிழ்ச்சியானது. தாயின்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

கடமைகளில் அக்குழந்தைகளின் உயிரைப் பாதுகாத்தலும், வளர்த்தலும் முக்கியமாக கருதப்படும் இக்காலகட்டத்தில் வறுமையிலும் குழந்தைகளை பேணிக்காத்த ஒரு தாயின் உள்ளம் இக்கதையின் மூலம் தெரியலாகிறது. மனித நேயம், மனிதப் பண்பு என்ற சொல்லின் ஆழமறியாமல் திரியும் மனிதர்களையே ஒவ்வொரு நூற்றாண்டும் விதைத்துக் கொண்டுள்ளது. தமிழகப் பண்பாட்டில் இந்த வகையான ஆதிக்கப்போக்கு ஒரு மனிதனை விலங்கு நிலைக்குத் தள்ளுகிறது. மனிதன் மனிதப்பண்பு இல்லாமல் இழிநிலைக்குத் தள்ளப்படும் பொழுது அங்கு பண்பாடும் தாழ்ந்து விடுகிறது என்பதை எடுத்துக் கூறும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## கி ராஜநாராயணனின் படைப்புச் சிந்தனை

உலகத்து எழுத்தாளர்கள் கடவுள்களையும் கடவுள் தொடர்பானவர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடும் பொழுது குழந்தைகளின் வறுமைநிலையையும், வீட்டில் உள்ள கதவையும் கருப்பொருளாகக் கொண்டு கதை எழுதியவர் கி.ராஜநாராயணன். மக்களின் பலதரப்பட்ட வாழ்க்கை நிலையை நேரில் கண்டு அதனை தன் படைப்பின் கருத்தோட்டமாகப் பதிவு செய்து தந்துள்ளார். கரிசல் எழுத்தாளரான இவர் கிராமமண்ணுக்கே உரிய அன்பு, பாசம், வீரம், கள்ளங்கபடமற்ற உள்ளம், உழைப்பு, உண்மைப் பேச்சு ஆகியகூறுகளை தம் பாத்திரப்படைப்பிற்குள் நுழைத்து நம் பண்பாட்டின் சின்னமாய் நிமிர்ந்து நிற்கும் கிராம வாழ்க்கை முறையை படிப்பவரின் கண்முன்னே நிறுத்துகிறார். வறண்ட நிலமான கரிசல் பகுதியை தனது கருப்பொருளாகக் கொண்டு அதில் வறுமை, குழந்தைகளின் நிலை, ஏழ்மையான தாய்,அஃறினைப் பொருளான கதவு ஆகியவற்றை கதை மாந்தர்களின் உள்ளத்து உணர்ச்சிகளின் மூலம் உத்திகளாக வெளிப்படுத்துகிறார்.

வாழ்வியல் பண்பாடு

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் '

என்கிறது கலித்தொகை. மனிதனை செம்மைப்படுத்தி அவனை நல்வழியில் நெறிப்படுத்துவது பண்பாடு. "பண்பட்டு வருவது பண்பாடு.நிலம் பண்பட பண்பட நல்ல விளைச்சல் கிடைக்கும். ஒரு சமுதாயம் நற்பண்புகளில் பண்பட பண்பட சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைத்து நிற்கும். இந்த பண்பாடு மக்களின் வாழ்க்கை முறையிலும் மனித உறவுகளிலும் பட்டொளி வீசிப் படரும்." என்று மா. பா. குருசாமி அவர்கள் கூறுகிறார்.

சமூகத்தில் தனி மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளே பண்பாட்டை தோற்றுவிக்கின்றன. ஏழை மக்களின் வறுமையும், கணவனில்லாப் பெண்களின் திறமையும், குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற உள்ள உணர்ச்சியும் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. குழந்தைகள் தங்கள் வாழ்கின்ற இடத்தில் மற்ற குழந்தைகளோடும் அஃறிணைப் பொருட்களோடும் ஏற்படுத்திக் கொள்ளும் உறவின் பாலமே 'கதவு' என்னும் சிறுகதையாகும். ‘ஒரு பெண் கணவன் இல்லாமல் வாழ முடியாது’ என்ற கட்டமைப்பை உடைத்து சுய உழைப்புடன் பொறுமையையும் மனத்திண்மையையும் தனது சக்தியாக்கிக் கொள்ளும் பெண்மையை தன் கதையின் தலைவியாக்கி இருக்கிறார் கி.ராஜநாராயணன்.

## வறுமை வாழ்வியல்

"சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினர்க்குரிய பொருள் கிடைக்கப் பெறாத நிலையே வறுமை எனப்படும். "( புதுக்கவிதையில் சமுதாயம்.ப-62) மழை ஒன்றையே நம்பி வாழ்க்கை நடத்தும் கரிசல் மக்களின் உலகமே போராட்டம் நிறைந்தது.கிராமத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் அடிப்படைத் தேவைகளான பொருளாதாரம், உணவு, கல்வி ஆகியவை பெற முடியாத நிலையில் வறுமையில் வாடுகின்றனர். எவ்வித குறையும் இல்லாமல் எதிர்கால உலகை கட்டமைத்து நிற்கும் மனித இனத்தின் கனவை சோர்வுறச் செய்வது வறுமை. இதனை இக்கதையின் தலைவி ரங்கம்மாள், தலையாரிடம் கூறும் கூற்றிலிருந்து தெரிய முடிகிறது.

"ஐயா, அவரு ஊரிலே இல்ல. மணிமுத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி.ஒரு தகவலையும் காணோம். மூணு வருஷமா மழை தண்ணீ இல்லயே. நாங்க என்னத்த வெச்சு உங்களுக்கு தீர்வை பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகள காப்பாத்ரதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாததா?"

என்று தலையாரிடம் கெஞ்சிக் கேட்கும் தாயின் பணிவும், வேண்டுதல் நிலையும் வெளிப்படுவதிலிருந்து கணவன் இல்லாமல் வாழும் பெண்ணின் வறுமை நிலை புலப்படுகிறது. "இப்பொழுது உலகத்தின் சில பாகங்களில் பெண்மக்கள் உணர்ச்சி பெற்று தங்கள் உரிமையை நாடி உழைக்கிறார்கள்" (தமிழ்ச் சோலை-ப. 50) என்று திரு.வி.க கூறுவது போல ரங்கம்மாளும் குழந்தைகளுக்காக காட்டுக்குச் சென்று சுள்ளிகளைப் பொறுக்கி வாழ்க்கையை நடத்துகிறாள். வீடு இருந்தும் கதவு இல்லாமல் உபயோகமற்று இருந்த நிலையை குறிப்பிடும் ஆசிரியர் அக்காட்சியையும், வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் பசிக் கொடுமையின் மூலம் புலப்படுத்துகிறார். தம்பி சீனிவாசன்,

"அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து பசிக்கி. சாப்பிட்டு இந்தப் படத்தை ஒட்டணும். தம்பி கஞ்சி இல்லை. நான் வெளிக்குப் போய் இருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லா கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது. கதவு இல்லையே! " என்று துக்கத்தோடும் ஏக்கத்தோடும் கூறுவதைப் பார்க்கும் பொழுது ஔவையின்,

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை "

என்னும் நல்வழிப் பாடலின் பொருள் விளங்குகிறது.

## பெண்மையின் வாழ்வியல்

' கதவு' என்னும் இச்சிறுகதையில், ரங்கம்மாள் என்ற பெண், 'கணவன் இல்லாமல் வாழ முடியாது' என்ற கட்டமைப்பை உடைத்து சுய உழைப்புடன் பொறுமையையும் மனத்திண்மையையும் தனது சக்தியாக்கிக் கொள்கிறாள். குடும்பத்தின் பொறுப்பு, பொருளாதாரம், பாதுகாப்பு, குழந்தை நலன் ஆகிய அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் திறனுடன் சமூகத்தில் பல சவால்களையும் நேரடியாக சந்தித்து வெற்றி பெறும் சூழலையும் கற்றுக் கொள்கிறாள். இதனை, அவளது மகளான லட்சுமி தலையாரிடம்,

'அப்பா ஊருக்குப் போயிருக்காங்க. அம்மா, காட்டுக்குப் போய் இருக்காங்க' என்று கூறும் கூற்றிலிருந்து தெரியமுடிகிறது. இன்றைய சமூகத்தில் ஆண்களை விட பெண்களே பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். அவர்களுக்கு குடும்ப பொறுப்புணர்வும், கணவன் வருவாய் தர இயலா நிலையில் இவர்களே வருவாய் ஈட்டும் இடத்திலும் இருந்து பெற்ற குழந்தைகளுக்கு பாதுகாவலராகவும் உள்ளனர். குடும்ப நிலையிலும் பொறுப்பு நிலையிலும் ஒரு ஆடவனின் உழைப்பும், ஒழுக்கமும், இல்லற மாண்பும் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன. ஆனால் இக்கதையில் வரும் ரங்கம்மாளின் கணவன் எங்கிருக்கிறான் என்பதே தெரியாமல் குடும்பமும் வறுமையில் வாழ்கிறது. ஒரு ஆணுக்குப் பொறுப்பும், கடமையும், ஒழுக்கமும் இருந்தால் தான் குடும்பமும், நாடும் பண்பட்டு மேலோங்கி இருக்கும் என்பதை அன்றே ஔவையார்,

"நாடா கொன்றோ! காடா கொன்றோ!
அவளா கொன்றோ!மிசையா கொன்றோ!
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லல் வாழிய நலனே "

என்று குறிப்பிடுவதன் மூலம் உணர முடிகிறது.

தன் ஆற்றாமையை யாரிடமும் கூற முடியாமல் தவிக்கும் பொழுது வாய்விட்டு அலறி தன் துக்கத்தை வெளிப்படுத்தும் ரங்கம்மாளின் நிலை இரக்கம் நிறைந்ததாக இருக்கின்றது.

"கதவை தலையாரி எடுத்துச் சென்று விட, காட்டில் ரங்கம்மாள் சுள்ளி சேகரிக்கும் பொழுது கையில் தேள் கொட்டிய வலியுடன் வீட்டிற்கு வருகிறாள். கதவை தலையாரி எடுத்துச் சென்று விட்டதையும் கைக்குழந்தைக்கு காய்ச்சலாக இருப்பதையும் தாங்கிக் கொள்ள முடியாமல் ரங்கம்மாள், "என்னைப் பெத்த தாயே" என்று அலறி அழுகிறாள்.

வாழ்வின் பிரச்சனைகளை மனதிற்குள்ளே வைத்து ஒவ்வொரு நாளும் புழுங்கிக்கொண்டு தன் ஆளுமையைச் சிதைத்துக் கொள்ளும் பெண்ணாக இல்லாமல் தனக்கு முன் உள்ள சிக்கலான பிரச்சனைகளை தைரியமாக எதிர் கொண்டு போராடும் பெண்ணாகவே ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளாள். இதனை கூற வந்த ஆசிரியர், கண் கலங்க வைக்கும் ஒரு காட்சியை நம் கண் முன்னே நிறுத்துகிறார்.

"வீட்டுக்கு வேலியாக இருக்கும் கதவு இல்லாததால் கார்த்திகை மாதத்தில் எழும் விஷ வாடைக்காற்றின் கொடுமை தாங்காமல் கைக்குழந்தையும் இறந்து விடுகிறது."

இதனை பார்க்கும் பொழுது, சமுதாயத்தின் மிகப்பெரிய அவலமான வறுமையினால் இறப்பு நிகழ்ந்தது என்பதை ஒரு தாயின் மனவேதனைக் கண்ணீரே அடையாளப்படுத்துவதை அறிய முடிகிறது. ஒவ்வொரு நாளும் அத்தாய் அடையும் மனப்போராட்டம் இறுதியில் அவளை வெறுமை நிலைக்குத் தள்ளுகிறது.அதனால் தன் கைக்குழந்தை இறந்தும் மற்ற இரு குழந்தைகளையும் பேணிக்காக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு வேலைக்குச் செல்கிறாள். இத்தாயின் சிந்தனை, செயல், நடத்தை, சொல் யாவும் தன் குழந்தைகளைச் சுற்றியே அமைகின்றன. எவ்வித கஷ்டமான சூழ்நிலையிலும் தன் குறிக்கோளை அடைவதற்குரிய விடாமுயற்சியே அவளிடம் காணப்படுகிறது, என்பதை இக்கதை உணர்த்துகிறது.

## குழந்தைகளின் வாழ்வியல்

குழந்தைகளின் உலகம் மிகவும் அற்புதமானது. ஆனந்தமானது. நேர்மறை எண்ணங்களும், விளையாட்டு உள்ளமும், குதூகளிப்பும் நிறைந்தது. தன் கண்ணுக்கு எதிரே நடப்பவை அனைத்தும் உண்மையென நினைக்கும் ஆற்றல் கொண்டது. நல்லது எது? தீயது எது? என அறியும் திறன் இல்லாத வெகுளித்தனமான உள்ளம் கொண்டவர்கள் குழந்தைகள். அவர்களது உலகில் மகிழ்ச்சி என்றும் நிலையானது. அனைத்து குழந்தைகளிடமும் கூடிக்களிக்கும் ஒற்றுமைப்பண்பும்,சுயநலமற்ற மனப்பாங்கும், நட்புடன் கூடிய தோழமையும் கொண்டது. வறுமையில் உடல் வாடினாலும் உள்ளம் மகிழ்ச்சியில் ஊஞ்சலாடும் என்னும் கருத்தோட்டத்தை ஆசிரியர் இக்கதையில் பதிவு செய்கிறார்.

"சிறுவர்கள் நிறைந்த அறிவு பெறாதவர்கள்.அவர்கள் அறிந்த சொற்கள் மிகக் குறைவு.அவர்கள் உள்ளமும் எதையும் நம்பும் இயல்புடையது. தீயவை நல்லவை என்று பகுத்தறிய முடியாதது" (குழந்தை இலக்கிய வரலாறு.ப-244) என்று பூவண்ணன் அவர்கள் குழந்தைகளின் மனநிலையை விளக்குகிறார்.

மன மகிழ்ச்சிக்காகவும் பொழுதுபோக்குக்காகவும் சீனிவாசன், பக்கத்துவீட்டு குழந்தைகளுடன் வீட்டில் உள்ள கதவின் மீது ஏறி விளையாடுகிறான். அஃறிணைப் பொருளான கதவின் மீது லட்சுமியும் சீனிவாசனும் பாசத்தையும், நேசத்தையும் வைத்திருந்ததால் 'கதவு 'வீட்டு ஆட்களோடு ஒருவரானது. அக்கதவில் படங்களை ஒட்டி விளையாடுவதால் அவர்களின் அம்மா அப்பா இல்லாத குறையையும் கதவு சரி செய்தது. சீனிவாசன் உணவின்றித் தவித்த பொழுதும் கதவில் படம் ஒட்டுவதையே தன் மகிழ்ச்சியாக நினைத்திருந்தான். ஆனால் தலையாரி கடனுக்காக கதவைத் தூக்கிச் சென்ற பொழுது சீனிவாசனுக்கும் லட்சுமிக்கும் பசியோடு ஏமாற்றமும் வருத்தமுமே மிகுதியாக இருந்தன.

சிறு வயதானாலும் லட்சுமி, "தான் சமைத்த கஞ்சியை நாய் குடித்து விட்டு சென்றுவிட்டதே. தாயின் பசிக்கு உணவில்லையே! என்று வருந்தும் நிலையை பார்க்கும் பொழுது அக்குழந்தையின் தாய்ப்பற்றும், வறுமையின் கொடுமையும் புலப்படுகிறது. போட்டி, பொறாமை எண்ணம் இல்லாத இக்குழந்தைகள் கடைசியில் தங்களின் வீட்டுக் கதவு சாவடியில் இருக்கிறது என்றவுடன் இருவரும் ஆனந்தம் கொண்டனர். தங்களின் கதவைக்காண மண்ணில் முளைத்திருந்த சா ரணத்தியும், வாழைச் செடிகளும் மிதிபடும்படியாக ஓடிச் சென்று கதவைக் கண்டு தங்களின் பாசத்தை கண்ணீரோடு கதவில் இணைத்து மகிழ்ந்தனர் என்று கதையை முடிக்கிறார் ஆசிரியர். கரிசல் காட்டு இலக்கியமான இக்கதையின் மூலம் குழந்தைகளின் மனதில் எவ்வித கெட்ட எண்ணங்களும், கிடையாது, மாறாக மிகுந்த இரக்கமும்,அன்பும், பண்பும் மிகுந்தவர்கள் என்று குழந்தைகளின் மன ஓட்டத்தையும் சிந்தனைகளையும் நமக்கு தெளிவாக சித்தரித்துக் காட்டுகிறார்.

## முடிவுரை

வானம் பார்த்த பூமியில் மழை பொய்க்கும் பொழுது அக்கிராம மக்களின் வாழ்வில் தடுமாற்றம் ஏற்படுகிறது. வறுமையும், பசிக் கொடுமையும் அம்மனிதர்களை வாட்டுகின்றன. எனினும் கணவன்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

இல்லாமல் வாழும் ஒரு பெண் குழந்தைகளுடன் ஒவ்வொரு நாளும் சூழ்நிலையோடு போராடிக் கொண்டிருக்கும் நிலையை கதவு என்னும் சிறுகதையின் மூலம் ஆசிரியர் கி.ராஜநாராயணன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

## துணைநூற் பட்டியல் (References)

1. தமிழக பண்பாட்டு வரலாறு -மா. இராசமாணிக்கனார்.
2. தமிழ் இலக்கிய வரலாறு- தமிழண்ணல்.
3. கதவு -கி. ராஜநாராயணன் .

© 2026 முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..